# உள்ளூராட்சி மன்றங்களின் சேவை வழங்கலை பெற்றுக் கொள்வதில் சிறுபான்மையோர் எதிர்கொள்ளும் நெருக்கடிகள்: கல்முனை மாநகர சபையை மையப்படுத்திய ஆய்வு

**Fathima Dilsiya M.[96] & Fathima Sifara M.[97]**

**ஆய்வுச் சுருக்கம்**

மக்களது தேவைகளின் அதிகரிப்புக்கேற்ப அவற்றின் நிறைவேற்றுகை அதிகம் உணரப்படுகின்றது. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் சென்றடைய அரசாங்கத்தின் பிரதான செயற்பாட்டாளர்களாக உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் எனும் போது மாநகர சபை, நகரசபை, பிரதேசசபை என்பன உள்ளடங்கும். இருப்பினும் குறித்த மன்றங்களின் சேவை வழங்கலானது குறித்த பிரதேசத்தின் பெரும்பான்மை மக்களை மையப்படுத்தியே நிறைவேற்றப்படுகின்றது. இதனால் சிறுபான்மையினர் பாதிக்கப்படுகின்றனர். அந்தவகையில், கல்முனை மாநகர சபையில் பிரதானமாக முஸ்லிம்கள், தமிழர்கள், பறங்கியர்கள், சிங்களவர்கள் என பல்லின மக்கள் வாழ்கின்றனர். இதில் சிறுபான்மையினரான தமிழ், சிங்கள பறங்கிய மக்கள் பெரும்பான்மை சமூகத்தினரை விட சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளதோடு அதனைப் பெற்றுக் கொள்ளும் வீதமும் குறைவாகக் காணப்படுகின்றது. எனவே, கல்முனை மாநகரசபைக்குட்பட்ட சிறுபான்மையினர் ஏன் பின்தங்கிய நிலையில் உள்ளனர்? இதனால் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் யாவை? சவால்கள் யாவை? என்பதை அறிதல் ஆய்வுப் பிரச்சினையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது, மாநகர சபையின் பொதுச்சேவை வழங்கலைப் பெற்றுக்கொள்வதில் சிறுபான்மையினர் எந்நிலையில் காணப்படுகின்றனர் என்பதை கண்டறிவதோடு அவர்கள் எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு அவற்றின் நிறைவேற்றுகை தொடர்பிலும் குறித்த மாநகர சபையின் அசமந்தபோக்கு தொடர்பிலும் தெளிவுபடுத்துவதை நோக்காக கொண்டது. இவ்வாய்வானது, பண்பு மற்றும் அளவு ரீதியான விவரணப் பகுப்பாய்வாக காணப்படுவதுடன் இதற்கான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலை தரவுகளில் பண்பு ரீதியான நேர்காணல், வினாக்கொத்து, மற்றும் இலக்க குழு கலந்துரையாடல் என்பன காணப்படுகின்றன. நேர்காணல் 6 எழுமாறாக தெரியப்பட்ட மாதிரிகளிலிருந்தும் வினாக்கொத்துக்கள் 32 மாதிரி எடுப்பின் மூலமும் தெரிவு செய்யப்பட்டு தரவுகள் திரட்டப்பட்டுள்ளன. இரண்டாம் நிலை தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம், அறிக்கைகள் என்பவற்றின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. விவரண ரீதியாக அட்டவணைகள், வரைபடங்கள் பயன்படுத்தி ஆய்வு முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததையடுத்து உள்ளூராட்சிமன்றங்கள் மக்களினதும் நாட்டினதும் அபிவிருத்திக்கும் அவசியமான ஒன்றாக காணப்படுவதோடு பொதுச் சேவை வழங்கலை மக்களுக்கு சிறப்பான முறையில் அனுபவிக்க உதவும் வகையில் அமைய வேண்டும். எனினும், பொதுச் சேவை வழங்கலின் போது நடைமுறையில் சிறுபான்மையினர் பக்கச்சார்பு, காலதாமதம், நெகிழ்வுத் தன்மை இன்மை போன்ற பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். இந்நிலையை மாற்றியமைத்து மாநகரசபையின் பொதுச்சேவை வழங்கலை சிறுபான்மையினருக்கு சரியான முறையில் பெற்றுக் கொள்ள வழியமைப்பதன் மூலம் இது தொடர்பாக மக்கள் மத்தியில் சாதகமான பார்வையை ஏற்படுத்த முடியும்.

**பிரதான சொற்கள்:** உள்ளூராட்சி மன்றம், மாநகர சபை, பொதுச் சேவை வழங்கல், சிறுபான்மை மக்கள், பிரதேச செயலகம்

## 1. அறிமுகம்

ஒரு நாட்டில் உள்ள அரசானது அந்நாட்டில் வாழுகின்ற மக்களின் நலன்களை மேம்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட தாபனமே உள்ளூராட்சி மன்றமாகும். இவ் உள்ளூராட்சி மன்றத்தின் செயற்பாடுகள் ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அவன் வாழும் காலத்தில் அவனுக்கு தேவையான பல பிரச்சினைகளுக்கு தீர்வு கொடுக்கின்ற ஒரு மையப் பகுதியாக செயற்படுகின்றது. உள்ளூராட்சி அரசாங்கம் என்பது ஒரு குறிப்பிடட பிரதேசத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட அவ் எல்லைக்குள் வாழும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது தொடர்பான பணிகளை ஆற்றுகின்ற மூன்றாம் மட்ட அரசாங்கமாகும். இது மத்திய, மாநில அரசாங்கங்களுக்கு கட்டுப்பட்ட ஒன்றாகவும் அவற்றின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு போன்றவற்றுக்கு உட்பட்டதாகவும் காணப்படுகின்றது.

To whom correspondence should be addressed: dilsiya094@gmail.com

[96] Undergraduate, Department of Political Science, South Eastern University of Sri Lanka.

[97] Undergraduate, Department of Political Science, South Eastern University of Sri Lanka.

மக்களுக்கு வலு சேர்க்கும் வகையில் அவர்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றை நிறைவேற்றுவதறகென அமைக்கப்பட்டட அமைப்புக்களே உள்ளூராட்சி அமைப்புக்களாகும். சமகாலத்தில் பிரஜைகளுக்கு அதிகமான பிரிவுகளில் சேவைகளை வழங்கக் கூடியவகையில் உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றன. மேலும் தனிப்பட்டவர்களினதும், சமூகத்தினரினதும் ஆரோக்கியமான வாழ்வு, நலன்புரி விடயங்கள், சௌகரிகம் போன்றவற்றுக்கு தேவையான சேவைகளை வழங்குவதாகவும் உள்ளன. அரசினுடைய பிரதான நோக்கங்களில் ஒன்றாக இருப்பது மக்களுக்கு தேவையான சேவை வழங்கலை வழங்குவதாகும். இச்சேவை வழங்கலை பெற்றுக்கொள்வதில் மக்கள் அதிகம் நாட்டம் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இந்தவகையில் பொதுச்சேவைகளை வழங்கும் தாபனங்களில் ஒன்றாக உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றன.

இலங்கையை பொறுத்தவரையில் உள்ளூராட்சி மன்றங்களின் தேவை மிகவும் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் இலங்கையில் மத்திய அரசு, மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் பல்வேறு நிலைகளில் ஆட்சி நிர்வாகம் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போது இலங்கையில் மூன்று வகையான உள்ளூராட்சி மன்றங்கள் காணப்படுகின்றன. அவையாவன மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை என்பனவாகும். பாரிய நகரத்தை மாநகரசபைகளும், சிறிய நகரத்தை பட்டிண சபைகளும் கிராம பகுதிகளை பிரதேச சபைகளும் கொண்டுளளளன. பிரதேசத்தின் தேவைகளை இனங்கண்டு பொதுமக்களுக்கு துரிதமான முறையில் சேவைகளை வழங்கும் வகையில் இவை தொழிற்படுகின்றன. உள்ளூராட்சி அமைப்புக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மாநகர சபை, நகர சபை, பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி அமைப்புக்களினூடாகவும் பொதுவான ஆட்சி நடைமுறைகள் வழியாகவும் அமுல்படுத்தலாம். அவையாவன

சொத்துக்களை பராதீனப்படுத்துவதற்கும், தன்னுரிமையாக்குவதற்கும், விற்பதற்கும் அதிகாரம் இவைகளுக்கு வழங்கப்படும். உள்ளூராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்தி ஒப்பந்தங்களை செய்து கொள்ளலாம். வரிகளை அறவிடும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. செலவுகளைக் கணிப்பிடும் அதிகாரம், உரிமைப் பத்திரங்களை வழங்கும் அதிகாரம், உப விதிகளை உருவாக்கும் அதிகாரம் மேற்படி அதிகாரங்களும் செயற்பாட்டு வழிமுறைகளும் உள்ளூராட்சி அதிகார சபை சட்டங்களிலும் உப சரத்துக்களிலும் கூறப்பட்டுள்ளன. தற்போது இலங்கையில் நிலவும் உள்ளூராட்சி அதிகார அமைப்புகளுக்கு மேற்கு நாடுகளில் காணப்படுவது போல் முழுமையான சுய ஆட்சி அதிகாரம் வழங்கப்படவில்லை. மேற்கு நாடுகளில் உள்ளூராட்சி அமைப்புகள் அவ்வவ் பிரதேசங்களுக்குரிய கல்வி, காவற்துறை, சமூக சேவைகள் என்பவற்றில் அதிகாரம் செலுத்த முடியும். ஆனால் இலங்கையில் உள்ளூராட்சி அமைப்புகள் பொது நலன்கள் சார்ந்த துறைகளில் குறிப்பாக பொதுச்சுகாதாரம், கழிவகற்றல் போன்றவற்றிலும் சில சமூக சேவைகளிலும் ஈடுபட முடியும்.

பிரதேச நகர சபைகளை விட மாநகர சபைகளுக்கு மேற்படி விடயங்களை கையாள்வதில் அதிக அதிகாரம் உண்டு. எனினும் பிரதேச நகர சபைகள் மக்களின் பங்களிப்புடன் கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் கணிசமான செல்வாக்கை செலுத்த முடியும். உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான மேலே கூறப்பட்ட சட்டங்கள் சரத்துக்களை விட இலங்கைக்கான பொதுவான சட்டஙகளையும் உள்ளூராட்சி அமைப்புக்கள் பயன்படுத்த முடியும். ஆவையாவன: அரசமைப்புச் சட்டம், உள்ளூராட்சி தேர்தல் சட்டம், பொது நிர்வாக சட்டம் முகாமைத்துவ சட்டம் வரி செலுத்தும் வழி வகைகள் தொடர்பான சட்டம் பொதுச்சுகாதாரம் பௌதீக திட்டமிடல் பொதுநலன் சேவைச்சட்டம் என்பனவாகும்.

மத்திய அரசின் பணிகளை இலகுவாகவும், பிரஜைகளின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் உள்ளூராட்சி மன்றங்கள் இலங்கையில் செயற்பட்டு வருகின்றன. நாட்டில் தற்போது 271 பிரதேச சபைகளும், 41 நகரசபைபளும், 23 மாநகரசபைகளும் இயங்கி வருகின்றன. இவற்றில் அதிக மக்கள் சனத்தொகையை உள்ளடக்கிய வகையில் அமைந்த மாநகர சபைகளின் பங்கும் பணியும் நாலுக்கு நாள் அதிகரித்து வருவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. இருந்தாலும் தற்காலத்தில் அதிகம்

விமர்சிக்கப்படும் ஒன்றாக இச்சபை காணப்படுகின்றது. இவற்றில் குறிப்பாக மாநகரசபையின் செயற்பாடுகளை நோக்கும் போது 1947 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க மாநகர கட்டளைச் சட்டத்திற்கு இணைவாக மாநகரசபைகள் உருவாக்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கான மாநகரசபையை பிரகடனப்படுத்துவது அதன் எல்லையை நிர்ணயித்து பெயரிடுவது போன்ற அதிகாரங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கே உண்டு. இச்சபைகள் உரிய மட்டத்தில் நகரத்தன்மை பொருந்திய பிரதேசங்களில் ஏற்படுத்தப்படும்.

இந்தவகையில் கல்முனை மாநகர சபையை பற்றி நோக்கும் போது கல்முனை மாநகர சபை என்பது வெறுமனே ஒரு ஊரையோ ஒரு இனத்தையோ பிரதிபலிப்பது அல்ல. இது தமிழர்கள், முஸ்லிமகள் என வாழக்கூடிய ˙11 கிராமங்களை உள்ளடக்கிய ஒரு மாநகரமாகும். ஒவ்வொரு முஸ்லிம் கிராமத்துக்குள்ளும் தமிழ் மக்களும் அதே போல் தமிழ் கிராமத்துக்குள் முஸ்லிம்களும் ஒன்றாகக் கலந்து வாழ்கின்றனர். அதிலும் விசேடமாக கல்முனை தொகுதி ஒரு முழுமையான உள்ளூராட்சி மன்றமாகவும் கானப்படுகின்றது.

1956ம் ஆண்டு காலப்பகுதியில் கல்முனை பட்டிண சபை என்றும் கரவாகு வடக்கு கிராமோதைய சபை, கரவாக தெற்கு கிராமோதைய சபை, கரவாகு மேற்கு கிராமோதைய சபை என்றும காணப்பட்டது. இந்த காலகட்டத்தில் சாய்ந்தமருதை சேர்ந்த சேட் முதலியாரே கல்முனை பட்டிண சபையின் தவிசாளராக இருந்தார். இதனைத் தொடர்ந்து செயின் தம்பி லெப்பை, எம். தம்பிப்பிள்ளை, எம்.சீ. அஹமது, கே.கே. மரைக்கார், ஏ.முகைதீன்பாவா ஆகியோர் கல்முனை பட்டிண சபையின் தவிசாளர்களாக இருந்தனர். இதன் பிறகு 1947 ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்கு அமைவாக தொகுதி தேர்தல் முறையும் விகிதாசர தேர்தல் முறையும் உருவாக்கப்பட்டது. 1977ம் ஆண்டு Administration of the speacial commition இன் கீழ் கொண்டு வரப்பட்டது.

இதன் பிறகு 4 உள்ளூராட்சி மன்றம் ஒன்றிணைக்கப்பட்டு 17 சபைகளை உள்ளடக்கியதான கல்முனை மாநகர சபை தோற்றம் பெற்றது. இருந்த போதும் அக்காலத்தில் தேர்தல் இடம் பெறவில்லை. 1994ம் ஆண்டு பிரதேச சபைக்கு முதன் முதலாக தேர்தல் இடம்பெற்றது. மீண்டும் 1999ம் ஆண்டு Administration of the special commitionஇன் கீழ் கொண்டு வரப்பட்து. மீண்டும் 2002 ம் ஆண்டு April 15 இல் Urban Council மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டது. இவ்வாறு 2002ம் ஆண்டு தரமுயற்றப்பட்ட கல்முனை மாநகர சபைக்கு 2006ம் ஆண்டே தேர்தல் இடம்பெற்றது.

அந்தவகையில் மக்களுக்கு பொது சேவை வழங்குகின்றவையாக இவை காணப்படுகின்றன. இருந்தாலும் பொது சேவை வழங்கல் தொடாபாக சிறுபாண்மை இன மக்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளை அறிவதற்கான முயற்சியாக இது இருப்பதுடன் கல்முனை மாநகரசபை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வாகவும் உள்ளது.

**2. ஆய்வுப் பிரச்சினை**

உள்ளுராட்சி மன்றங்களில் ஒன்றான மாநகர சபையானது மக்களுக்கு பொதுச்சேவை வழங்குகின்ற போதிலும் அச்சேவை வழங்கல் தொடர்பாக மக்களின் பார்வையானது மாறுபட்டு செல்வதனை அவதானிக்கலாம். அந்த வகையில் ஆய்வு பிரதேசமான கல்முனை மாநகர சபையில் பெரும்பான்மையினரை விட சிறுபான்மையினருக்கான சேவை வழங்களானது பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. இதனை ஆய்வு பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**3. ஆய்வு நோக்கம்**

இவ்வாய்வானது மாநகர சபையின் பொதுச்சேவை வழங்கலானது சிறுபான்மையினர் மத்தியில் எந்நிலையில் காணப்படுகின்றது என்பதை கண்டறிவதோடு அவர்கள் எதிர்நோக்கும் சவால்களை

இனங்கண்டு அவற்றின் நிறைவேற்றுகை தொடர்பிலும் குறித்த மாநகர சபையின் அசமந்தபோக்கு தொடர்பிலும் தெளிவுபடுத்துவதையும் நோக்காக கொண்டது.

**4. ஆய்வு முறையியல்**

ஆய்வு முறையியல் இங்கு இரு வகையான முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. அவையாவன, பண்பு ரீதியானதும் அளவு ரீதியானதுமாகும். அந்தவகையில் இங்கு பண்பு மற்றும் எண் ரீதியான விவரண பகுப்பாய்வாக இவ்வாய்வு அமைவதுடன் இதற்கான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகள் நேர்காணல் மூலமும் மற்றும் வினாக்கொத்து முறை மூலமும் பெறப்பட்டதோடு இரண்டாம் நிலை தரவுகள் நூல்கள், பத்திரிகைகள் மற்றும் இணைய தளங்களில் இருந்து பொதுச்சேவை வழங்கல் மற்றும் மாநகர சபை தொடர்பான தகவல்களைப்பெற பயன்படுத்தப்பட்டது.

**5. ஆய்வு பிரதேசம்**

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள கல்முனை நகரமானது இலங்கை தீவின் அழகிய வயல் வெளிகளையும் இயற்கை வளங்களையும் கொண்ட எழில் நிறைந்த நகரமாகும். இந்நகரமானது கிழக்கு மாகாணத்தின் அம்பாரை மாவட்டத்தில் அமைந்து இருக்கும் சாய்ந்தமருது, கல்முனைக்குடி, மருதமுனை உள்ளடங்களாக 11 பிரதேசங்களை நிலப்பரப்பாகக் கொண்ட ஒரு மாநகர சபையாகும். இப்பிரதேசமானது 22.8 சதுர கிலோ மீற்றர் பரப்பளவினைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதன் கிழக்கு எல்லையாக வங்காள விரிகுடா கடலினையும் வடக்கே பெரிய நீலாவனையையும் தெற்கே காரைதீவையும் எல்லையாகக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தில் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள், பரங்கியர்கள் என நான்கு இனத்தை சேர்ந்தோரும் வாழ்கின்றனர். கல்முனை சாய்ந்தமருது என்ற வகையில இரு பிரதான பிரதேச செயலகத்தை கொண்ட இம்மாநகர சபையானது தமிழ் உப பிரதேச செயலகப்பரிவு என்ற ஒரு உப செயலகப்பிரிவையும கொண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இம்மாநகர சபையை எடுத்து நோக்கும்போது முஸ்லிம்களே பெரும்பான்மையினராகவும் தமிழ், சிங்கள, பறங்கியர் உள்ளிட்ட ஏனையோர் சிறுபான்மையினராக வாழ்கின்றனர்.

இவ்வகையில் 2014ம் ஆண்டின் கல்முனை மாநகர சபையின் சனத்தொகை கணக்கெடுப்பின் படி மொத்த சனத்தொகை 115217 ஆகும் இதில் முஸ்லிம் மக்கள் 82643 உம் தமிழ் மக்கள் 31342 உம் சிங்கள மக்கள் 215 பேரும் ஏனையோர்களின் எண்ணிக்கை 1017கவும் காணப்படுகின்றன. இதில் 0.19 வீதம் சிங்களவர்களும், தமிழர்கள் 2720 வீதமும், முஸ்லிம்கள் 71.73 வீதமும் ஏனையோர் 0.88 வீதமும் வாழ்கின்றனர். இதில் கல்முனை பிரதேச செயலகத்தில் மாத்திரமே அதிகளவான மக்கள் வாழ்கின்றனர். இதனை அடிப்படையாக கொண்டு இவ் வரைபடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

| KALMUNAI MOUCIPAL CONCIL TAMIL AREA | | |
|---|---|---|
| . | KALMUNAI(MD) | KALMUNAI(TD) |
| SINHALESE | 45 | 170 |
| TAMIL | 73 | 31269 |
| MUSLIMS | 50546 | 3070 |
| OTHERS | | 1017 |

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் வாழும் இப்பிரதேசமானது இவ்வகையான அனைத்து இன மக்களை உள்ளடக்கிய வகையில் ஒரு மாநகரசபையைக் கொண்டிருக்கின்றது. இப்பிரதேசத்தில் உள்ள மாநகரசபையானது மக்களுக்கான சேவை வழங்களை பல்வேறுப்பட்ட திட்டமிடல்கள் வழிமுறைகளினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் இப்பிரதேச வாழ் சிறுபாண்மையினர் இச் சேவை வழங்கல் தொடர்பில் மறை மனோநிலைமையை கொண்டுள்ளதால் அது தொடர்பான அவர்களின் பிரச்சினைகளைக் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**6. கோட்பாடு மற்றும் எண்ணக்கரு பற்றிய விளக்கம்**

அரசாங்க நிறுவனங்களால் இலாப நோக்கமின்றி குறிப்பிட்ட நாட்டின் குடிமக்களுக்காக வழங்கப்படும் சேவைகளே பொதுச் சேவைகள் ஆகும். பொதுசசேவைகள் வழங்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்த பலம் பொருந்திய நிறுவனங்களுள் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளும் முக்கியமானவையாகும். நாட்டின் பொதுச்சேவைகளை பெற்றுக்கொள்கின்ற வழிமுறைகளுள் அவசியமான ஒன்றாக கருதப்படும் உள்ளூராட்சி மன்றங்கள் மத்தி, மாநில அரசாங்கங்களுக்கு கட்டுப்பட்வையாக காணப்படுகின்றன. அதிகார பகிர்வு அடுக்கு நிலையின் அடிமட்ட ஆட்சிமுறையை அடிப்படையாக கொண்டு உள்ளூராட்சி சபைகள் ஜனநாயக ஆட்சியிலும் பிணக்குகளை தீர்ப்பதிலும் பங்காற்றுகின்றன. (அதிகார பகிர்வின் இருபத்திரண்டு ஆண்டுகள்: 246)

உள்ளூராட்சிமன்றம் என்ற பதமானது இலக்கிய ரீதியாக மக்களால் உள்ளூர் விடயங்களை நிருவகிப்பதனைக் குறிப்பிடுகின்றது. இது மத்திய, மாநில அரசாங்கத்தை விட உள்ளூர் மக்களால் அவர்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அடிப்படையாக நோக்கப்படுகின்றது. குறிப்பிட்ட கால இடைவெளியில் மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கு உள்ளூர் விடயங்கள் தொடர்பான நிருவாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் உள்ளூராட்சி சபைகளின் சேவை வழங்கல் பொறுப்புக்களை, அவை துணையானவை எனும் அடிப்படையில் மிகப்பிரதான ஒன்றாக கையாளப்படுகின்றது. உள்ளூராட்சி ஆட்சிகள் மூன்று சட்டங்களின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளன. 1937ம் ஆண்டின் 29மஆம் இலக்க மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், 1939ஆம் ஆண்டைய 61ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டம், 1987ஆம் ஆண்டின் 15ஆம இலக்க பிரதேச சபைகள் சட்டம் என்பனவே அவையாகும்.

இச்சட்டங்களினால் உள்ளூராட்சிக்கு வழங்கப்பட்ட ஆணையானது அவற்றின் கடமைகளையும், அனுமதிக்கப்பட்ட அதிகாரங்களையும் தெளிவுபடுத்துகின்றன. உள்ளூராட்சிகளின் குறித்துரைக்கப்பட்ட கடமைகளானது, அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட செயல்கள் வரை நீணடு செல்வதோடு அச்சட்டங்களின் கீழ் அவற்றை வழங்குவதற்கும் எதிர்பாக்கப்படுகின்றது. அவ்வாறு எதிர்ப்பார்க்கப்படும் சேவைகள் பொதுச் சுகாதாரம், பொதுப்பாதைகள் மற்றும் அத்தியவசிய சேவைகள் என மூன்று முக்கிய துறைகளைச் சேர்ந்தவையாகும்.

பிரஜைகளை பொறுத்தவரை அரசின் பொதுச்சேவை வழங்கல் மீதான அவர்களின் எதிர்பார்ப்பும் அதிகரித்து வந்துள்ளமையை வரலாற்றினூடாக அறிந்து கொள்ள முடியும். மக்களின் இவ்வெதிர்பார்புக்கான நியாயமாக அவர்கள் செலுத்தும் வரியினை கருதுகின்றனர். அதனடிப்படையில் அரசுகளும் மக்களின் வரிப்பணத்தை கொண்டு காலாகாலம் வித்தியாசமான வழிமுறைகளில் பொதுச்சேவை வழங்கலில் ஈடுபடுகின்றன.

அரசாங்கத்தின் முதன்மையான நோக்கம் அதன் குடிமக்களுக்கு சுகாதாரம், நலன்கள், பாதுகாப்பு போன்றவற்றை வழங்குவதாகும். உள்நாட்டு ரீதியாக இந்நோக்கம் பொலிஸ், தீயணைப்பு, சுகாதாரம், கல்வி, குப்பை சேகரித்தல், நீர் வழங்கல், பொதுப்போக்குவரத்து, மீளுற்பத்தி, சமூக சேவை, பொது வேலைகள் போன்ற நேரடியான சேவை வழங்கலின் மூலமும் மாநில அல்லது தேசிய ரீதியாக திருத்துதல், உள ஆரோக்கியம், நெடுஞ்சாலை, உயர்கல்வி, சூழல், தேசிய பாதுகாப்பு போன்றவற்றை வழங்குவதன் மூலமும் பூர்த்தி செய்யப்படுகின்றது.

குடிமக்களால் செலுத்தப்படுகின்ற வரிகளைக் கொண்டும் அரசினால் கிடைக்கப் பெற்ற அதிகாரத்தின் அடிப்படையிலும் சேவை வழங்களில் ஈடுபடும் அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் தமது கடமை மற்றும் பொறுப்புக்கனை நிறைவேற்றுகின்றனர். அந்த வகையில் பொதுச்சேவை வழங்கலின் தரத்தை பின்வரும் பண்புகளை அடிப்படையாக கொண்டு விளங்கிக் கொள்ளலாம்.

பொறுப்புடமை எனும் போது சேவை வழங்களில் ஈடுபடும் உறுப்பினர்கள் சேவை வழங்கல் தொடர்பாக நியாயமான நடைமுறைகளைக் கடைபிடித்தல், பிரஜைகளை அலட்சியப்படுத்தாது, பாரபட்சம் காட்டாது சரியான முறையில் அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதிலும், பொதுக் கொள்கைப் பற்றிய விழிப்புணர்வு என்பன பற்றி தெளிவூட்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும். அணுகக்கூடிய தன்மை இருக்க வேண்டும். சேவை வழங்கல் தயார்நிலையிலும், வேலைத்திட்டங்கள் பற்றித் தகவல்கள் தெளிவாக விபரிக்கப்பட வேண்டும். அதன் மூலமே படித்த மற்றும் பாமர மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் அவர்களை அணுகக் கூடிய வகையில் சிறந்த பண்புகளை வெளிப்படுத்துவதாகும்.

நம்பகத்தன்மை எனும் போது சேவைகள் பொதுமைப்பட்டதாக வழங்கப்படுதல் வேண்டும். சேவை வழங்கப்படும் போது அவை பொதுமக்களால் சிறந்த முறையில் அடைந்துக் கொள்ளப்படுகின்றதா? என்பதையுயம் அவ்வாறு இல்லாத போது அதிருப்தி அடைகின்ற பிரஜைகளின் பிரச்சினை நிறைவேற்றக்கடுகின்றதா? என்பதையும் அதற்கான முறைப்பாடுகள் கோவைப்படுத்தப்பட்டு தீர்க்கப்படுகின்றதா? என்பதையும் உள்ளடக்கிய விடயங்களே நம்பகத் தன்மையாகும். (Abdul Jabbar.M & Fathima Sajeetha.T, 2015)

எனவேதான் ஆய்வு பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சிமன்றத்தின் சேவை வழங்கல் தொடர்பில் மக்களின் கண்ணோட்டத்தை ஆராய்ந்து மக்களது பிரச்சினைகளை அடையாளம் காண்பதாக இவ்வாய்வு காணப்படுகின்றது.

இவ்வாறான சேவைகளை வழங்குவதில் நவீன அரசுகள் பல்வேறுபட்ட அணுகுமுறைகளை கையாள்வதுடன் அவை அரசிற்கு அரசு வேறுபட்டதாகவும் உள்ளன. இலங்கை அரசாங்கம் தமக்கேயுரித்தான வழிமுறைகளில் பொதுச்சேவை வழங்கலை விஸ்தரித்து வந்துள்ளமையை சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் காணலாம். இவ்வாறு உள்ளூராட்சி மன்றங்களையும், பொது சேவை வழங்கலையும் நோக்கலாம்.

**7. பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்ததையடுத்து கல்முனை மாநகரசபையானது மக்களுக்கு சேவை வழங்குவதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. இருந்தாலும் கல்முனை மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வாழும் சிறுபாண்மையினரான தமிழ், சிங்கள, பறங்கிய மக்கள் தங்களது சேவைகளை சிறந்த முறையில் பெற்றுக்கொள்வது தொடர்பில் பல இடர்களை சந்திக்க நேரிடுகின்றது. இதனால் அம்மக்களுக்கு கல்முனை மாநகரசபை தொடர்பில் ஒரு விரக்தி நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான காரணம் கல்முனை மாநகர சபையின் செயற்பாடுகளும் சேவை வழங்கல் தொடர்பாக மக்களுக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும் அகும்.

கல்முனை மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசங்கள் எனும் போது கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்கள் உள்ளடக்கியுள்ளன. இங்கு சிறுபாண்மை இன மக்கள் பெரும்பாண்மை சமுகத்தை போன்று சேவைகளை பெற்றுக்கொள்வது என்பது கேள்விக்குரியாகவே உள்ளது.

மாநகர சட்டக்கோவை 40(1) இற்கு இணங்க பின்வரும் அதிகாரங்களிலும் மக்கள் தங்களது பொதுச் சேவை வழங்கலை பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அந்தவகையில் பொதுக் கட்டிடம், தெரு விளக்குகளை அமைத்தல், சந்தைகளை அமைத்து பராமரித்தல், பொதுக் குளியல் பிரதேசங்களை பராமரிக்கவும் அதிகாரங்களை கொண்டுள்ளது. ஆனால் அவற்றைக் கூட சரியான முறையில் செயற்படுத்த முடியாத நிலை உள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் கல்முனை மாநகரசபையின் சேவை வழஙகலானது மக்களுக்கு பொதுச் சேவை வழங்கள் தொடர்பில் பொது மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை இருந்தாலும் அதிலும் குறிப்பாக சிறுபாண்மையினருக்கான சேவை வழங்கலில் பூரணத்தன்மை என்பது கேள்விக்குரியாகவே உள்ளது. அந்தவகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கவ்முனை மாநகர சபை தொடர்பாக சிறுபாண்மை மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை பட்டியல்படுத்துகின்ற போது அவற்றை பின்வரும் வகையில் எடுத்து நோக்கலாம்.

❖ பொது ஊழியர்கள் அலட்சியப்படுத்தல்: பொது சேவை வழங்கள் தொடர்பாக கல்முனை மாநகரசபையில் சிறுபாண்மையினர் பொது ஊழியர்களால் அலட்சியப்படுத்தப்படுகின்றனர். தம்மை நாடி வருகின்ற மக்களை அவர்கள் அலட்சியப்படுத்துவதுடன் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் சரியான விளக்கங்களை வழங்காது காலம் தாழ்த்துகின்றனர். அதனால் சிறிய சிறிய சேவைகளை பெற்றுக் கொள்வதில் கூட அலைந்து திரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு உதாரணமாக தமது பிரதேச பகுதியில் மின்கம்பங்களில் பொருத்தப்பட்டிருக்கும் மினகுமிழ்கள் ஒளிரப்படாமல் இருந்தால அதனைப் பற்றி அறிவிக்க சென்றாலும் அது தொடர்பாக எற்தவித நடவடிக்கைகளும் உாயி முறையில் நடைமுறைப்படுத்தப்படாமல் அம்மக்களை ஏமாற்றுவதாக உள்ளது.

❖ வளங்களை பகிர்ந்தளிப்பதில் பாரபட்சம்: மேலும் மாநகரசபையில் வளங்களை பகிர்ந்தளிப்பதில் கூட பாரபட்சம் காட்டுவதாகவும் சிறுபாண்மை மக்கள் மத்தியில் ஒரு குற்றச்சாட்டு நிலவுகின்றது. அதாவது அங்கு வாழும் பெரும்பாண்மையினரே அதிகமாக பயனடையக்கூடிய நிலை காணப்படுகின்றது. மாநகரசபையிலுள்ள சில அதிகாரிகள் தமக்கு வேண்டியவர்களுக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்குவதாகவும், தமக்கு வழங்கப்படுகினற சேவை வழங்கலை உரிய முறையில் செயற்படுத்தாமல் அதனை ஏனைய பகுதிகளுக்கு வழங்குவதாகவும் விமர்சிக்கின்றனர். சமத்துவமான முறையில் சேவைகளை பெற்றுக்கொள்ளாது பெரும்பாண்மை, சிறுபாண்மை என்கின்ற வேறுபாட்டினால் சமத்துவமற்ற நிலை தோன்றி பாரபட்சம் உருவாகியுள்ளது.

❖ அரசியல்வாதிகளின் செயற்பாடு: காலதிதிற்கு காலம் ஆடசியை பொறுப்பேற்கின்ற அரசியல்வாதிகள் தாங்கள் ஆட்சி செய்யும் காலத்தில் எப்படி உழைக்கலாம்? எவ்வளவு உழைக்கலாம்? ஏன்பதைப் பற்றியே சிந்திப்பதாக உள்ளது என மக்கள் அங்கலாய்கின்றனர். இதனாலேயே உள்ளூராட்சி மன்றங்கள் பெரும் பின்னடைவை எதிர்நோக்கி மக்களுக்கு சரியான முறையில் சேவை செய்யமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இவ்வாறான குறைபாடுகளும் சேவை மனப்பான்மையும் மக்களுக்கு பெரும் அசௌகரிகங்களை ஏற்படுத்துகின்றது. மக்கள் வரி செலுத்த தவறினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பார்கள். ஆட்சியாளர்களே இவ்வாறு தவறு செய்தால் யாரிடம் போய் முறையிடுவது என மக்கள் திண்டாடுகின்றனர்.

❖ தமிழ், முஸ்லிம் உறவை பற்றி பேசுபவர்கள் இரு இனங்களும் சேர்ந்து வாழும் பிரதேசத்தில் இவ்வாறு செய்வது மக்களிடையே குரோதத்தை வளர்ப்பது போன்று அமைந்துள்ளது. தமது இனம் சார்ந்த பிரதேசங்களை ஆக்கிரமித்து கூறு போடுவதில் பிரதேசத்தின் சில அரசியல்வாதிகள் ஈடுபட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

❖ கல்முனை மாநகர சபையின் ஆட்சி நீண்டகாலமாக ஒரே கட்சியின் கீழ் உள்ளதால் அங்கு ஊழல்கள் அதிகமாகியுள்ளதுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன. அவ்வாறு அவர்கள் இணைந்தாலும் அது தேர்தல் காலங்களில் மட்டுமே இணைகின்றனர். மக்களின் பிரச்சினைகளை கலந்தாலோசித்து தீர்ப்பதற்கு வழிமுறைகள் எதுவும் கையாளப்படுவதில்லை என மக்கள் குற்றம்சாடடுகின்றனர்.

- சேவை வழங்கலில் அதிருப்தி: கல்முனை மாநகரசபை தமிழ் பிரதேசங்களை புறக்கணிக்கும் விடயம் தொடர்பிலும், கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தல் தொடர்பிலும் காலகாலமாக அப்பிரதேச மக்களால் பல்வேறு கோசங்களும் ஆர்ப்பாட்டங்களும் நிகழ்த்தப்பட்டிருந்தாலும் அது தொடாபில் கல்முனை மாநகர சபையால் எந்தவித பலாபலன்களும் கிடைக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- சிறுபாண்மை சமூகங்களில் ஒன்றான தமிழ்மக்கள் தொடர்பாக பிரச்சினைகளை கையாளுவதற்கு ஒரு மாதத்திற்கு இரு தடவையாவது சந்திப்பொன்றை நடாத்த வேண்டும் என்ற கருத்து பலகாலமாக குறிப்பிடப்பட்டு வந்தாலும் அவை இன்று வரைக்கும் நிறைவேற்றப்படாத ஒரு எதிர்பார்க்கையாக உள்ளது என்பது அப்பிரதேச மக்களின் குற்றச்சாட்டாகும். தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துகின்ற போதே மக்கள் தங்களது பொதுச்சேவைகளை சுதந்திரமான முறையில் பெற முடியும் என்ற கருத்து சமூகத்தில் நிலவுகின்றது.

- வீதிகளை புணரமைப்பு செய்வதில் எளிய வழிமுறைகள் பின்பற்றப்படாமை: வீதிகளை புணரமைப்பதிலுள்ள செயற்பாடுகள் மாநகரசபை தனது எல்லைக்குட்பட்ட எல்லா வீதிகளையும், திறந்த வெளிகளையும் பராமரிப்பதற்கும், சுத்திகரிப்பதற்கும் மற்றும் தனிப்பட்ட வீதிகளையும், பராமரிக்க , சுத்திகரிக்க, திருத்த அதிகாரம் உண்டு. இருருந்தாலும் கல்முனை மாநகரசபைக்கு உட்பட்ட வீதியாக தரம் வாய்ந்த வீதிகள் காணப்படுகின்றன. இவற்றைக்கூட சிறந்தமுறையில் பராமரிக்காமல் விட்டிருப்பது மக்களுக்கு மாநகரசபை தொடர்பாக தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக கல்முனை சிங்கள மஹா வித்தியாலயத்துக்குட்பட்ட பிரதேசம் ஏன் கேட்பாரற்று காணப்படுகின்றது என்பது தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் எதிர் மனோநிலை காணப்படுகின்றது. பாடசாலைக்கு அண்மையிலுள்ள வீதி, கழிவகற்றல், வடிகாலமைப்பு, மையானம் என்பன புணரமைக்கப்படாமல் காணப்படுகின்றது.

- கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் பொதுமயானம், தேவாலயம் மற்றும் மக்கள் குடிமனைகள் போன்றன காணப்படுகின்றன. பல இடங்களில் வடிகான்கள் திருத்தப்படாமல் மூடிகள் சிதறிக் காணப்படுவதுடன் அப்பாதையினூடாக செல்லும் மக்கள் பல அசௌகரிகங்களுக்கு உட்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

- கழிவகற்றலை மேற்கொள்வதில் நேரசூசி அமைக்கப்படமை: மேலும் கழிவகற்றல் தொடர்பிலான நடவடிக்கைகளை விருத்தி செய்வதில் தற்காலத்தில் மாநகர சபையால் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளபடுகின்றது. இருந்தாலும் குறித்த மாநகரசபைக்குட்பட்ட சிறுபாண்மை இன மக்கள் வாழும் பிரதேசத்தில் கழிவுகளை சேகரிப்பதற்காக தின அடிப்படையில் அமைந்த நேரசூசி சரியான முறையில் வகுக்கப்படவில்லை என்பதும் கழிவுகளை சேகரிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களின் அலட்சியப்போக்கும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுளளது. மேற்கூறப்பட்ட வகையில் அமைந்த மாநகரசபையின் அசமந்த போக்கானது, மக்களினால் சேகரித்து வைக்கப்பட்ட குப்பைகள் கட்டாக்காலிகளின் தொல்லை காரணமாக சுகாதார ரீதியான பிரச்சினைகளையும் சூழல் மாசடைவையும் ஏற்படுத்துவதாக உள்ளது. ஏனைய மாநகர சபையால் தின அடிப்படையில் கழிவகற்றலை மேற்கொள்ள முடியும் என்றால் ஏன் கல்முனை மாநகரசபைக்கு முடியவில்லை என்ற விமர்சனம் காணப்படுகின்றது. கட்டாக்காலி மாடுகளை கட்டுப்படுத்துவதற்கு கல்முனை மாநகரசபையினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடுகின்றனர். இறுக்கமான சட்டங்கள் இருக்கின்ற போதிலும் கல்முனை மாநகரசபை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

- சந்தைகளை சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை. ஒரு மாநகர சபையின் அபிவிருத்தி என்பது நூலகத்தை அமைத்தல், வசதிகளை கொண்டதாக சந்தைகளை நிர்மாணித்தல், வடிகான் மற்றும் வீதிகளை புணரமைப்பு செய்தல் போன்றனவாகும். இதன் மூலமே அப்பிரதேசத்துக்ககுட்பட்ட மக்கள் பயனடைவர். அவற்றை நிர்மாணம் செய்தவர்களுக்கும் அக்கிராம மக்கள் நன்றியுடையவர்களாக இருப்பர். உள்ளூராட்சி நிறுவனங்கள் தமக்குரிய வருமானத்தை தேடி திட்டங்களை வகுக்கும் போது கல்முனை மாநகர சபையின் செயற்பாடுகள் முற்றிலும் மாறுபட்டவையாக காணப்படுகின்றன. ஆனால் மாநகர சபைக்குட்பட்ட நற்பிடடிமுனை பிரதேசத்தில் 2010ல் திறந்து வைக்கப்பட்ட பொதசந்தைக் கட்டடம் இன்று வரை மூடப்பட்டு பாழடைந்து காணப்படுகிறது. கட்டி முடிக்கப்பட்ட கட்டடத்தையே திறக்க முடியாத கல்முனை மாநகர சபை நற்பிட்டிமுனை மக்களை ஏமற்றிவிட்டதா என்று கேட்கின்றனர். இதனால் கல்முனை மாநகர சபைக்கான வருமானம் இல்லாது செய்யப்பட்டுள்ளமை மாநகர நிருவாகம் செய்துள்ள பாரிய குற்றமாகும். உள்ளூராட்சி கட்டளைச் சட்டத்தின்படி கேள்வித் தொகையை தீர்மானிக்கும் அதிகாரம் மாநகரசபைக்கு உள்ளது. இருந்தாலும் அவை தொடர்பில் சரியான நடவடிக்கை எடுக்காமல் இருப்பது மக்கள் மத்தியல் பாரிய அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

- வீதிகளின் பெயர்களை அனுமதியின்றி மாற்றுகின்ற செயற்பாடுகள்: கல்முனையிலுள்ள வீதிகள் சில திட்டமிட்டு பெயர் மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. 300 வருடம் வாய்ந்த பழமை வாய்ந்த தமிழர்களின் பூர்வீக கிரமமாக அமைந்துள்ள கல்முனை தரவை பிள்ளையார் கோயில் வீதியை கடற்கரை பள்ளிவாசல் வீதியாக மாற்ற பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதே போனறு கல்முனை நகர மத்தியில் அமைந்துள்ள தனியார் பேருந்து நிலையத்திற்கு அருகில் பொதுசந்தைக்கு செல்லும் பாதை இரவோடு இரவாக முதலியார் காரியப்பர் வீதி என பெயரிட்டமைக்கு பல்வேறு எதிர்ப்புக்களை தெரிவித்தனர். இவ்வாறான செயற்பாடுகள் கூட இன்னும் இடம்பெறலாம் என மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. கல்முனை பிரதேசதித்தில் மத அடையாளங்கள் எவ்வகையிலும் அழிக்கப்படக் கூடாது என்றும் ஆலயங்களின் சுவர்கள், சிலைகள தகர்த்தப்படுவது முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.

- கல்முனை பழைய பஸ்தரிப்பு நிலையத்தில் தனியார் வங்கிக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. அதனால் நகரில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. பஸ் நிலையத்திற்கு செல்வதானால் தனியார் பஸ்களின் செயற்பாடுகளையே காணலாம். இவ்வறான செயற்பாடுகளினால் மக்கள் விபத்துக்குள்ளாகின்ற நிலைமையும் ஏற்படுகின்றது. மக்கள் தங்களது செயற்பாடுகளை சிறப்பான முறையில் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

- மைதானம் தொடர்பிலும் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படடுள்ளன. அதாவது கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட மைதானங்களாக இரண்டு மைதானங்களே காணப்படுகின்றன. அதில் கல்முனை சந்தங்கேணி மைதானம் ஒரு பொது மைதானமாக இருந்தாலும் அதனை ஒரு கழகம் மட்டுமே பயன்படுத்தி வருகின்றது. சுனாமிக்கு பின்னர் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் பொழுதுபோக்கு நிகழ்சிசிகளையோ சிறு விளையாடடுப் போடடிகளையோ நடாததுவதற்கு சரியான இடங்கள் அமையப்பெறாமல் இருப்பதற்கும் மாநகர சபையின் செயற்பாடுகளே காரணமாகும். அவ்வாறன இடங்கள் காணப்பட்டாலும் அவை குப்பைக் கூளங்களால் சூழ்ந்து காணப்படுகின்ற நிலமையை அறியலாம்.

- மின்குமிழ்களை உரிய இடங்களுக்கு வழங்காமை மின்குமிழ்கள் கல்முனை மாநகர பிரதேசத்துக்குட்பட்ட கிராமங்களில் மின் விளக்குகளை பொருத்துவதற்காக ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஒரு தொகை மின்குமிழ்கள் வழங்கப்படுவது வழமை. ஆனாலும் இதுவரைக்கும் சரியான முறையில் மின்குமிழ்களை உரியவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. பாதையிலுள்ள மின்கம்பங்களின் மின்விளக்குகள் ஒளிராமல் இருப்பதைக் கண்டும் அதனை சீரமைக்காமல் உள்ளனர் எனவும் குற்றம்சாட்டுகின்றனர்.

- வரிகளை அறவீடுவதைப் பற்றிய தெளிவின்மை. கல்முனை மநகரசபை வரிகளை அதிகரிக்கும் நிலைபபாட்டினை கொண்டிருக்கும் போது அது தொடர்பாக மக்களுக்கு வலுவூட்டுவது என்பது குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. மேலும் வரி அறவிட்டதற்கு பின்னர் எதனை செய்ய ஆலோசனை கொண்டுள்ளனர் என்பதையும் மக்களுக்கு தெளிவூட்டாமல் உள்ளனர்.

- வடிகான் அமைப்பு தொடர்பில் கூட பாரிய பிரச்சினை நிலவுகின்றது. கல்முனை மாநகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் குறிப்பாக தமிழ், சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் வடிகாலமைப்பு திட்டங்கள் ஒழுங்காக நிர்மாணிக்கப்படவில்லை என்றும் அமைத்துக் கொடுக்கப்பட்ட வடிகான்கள் தரம் வாய்ந்தவையாக இல்லாததனால் அவை சிதைவடைந்து காணப்படுவவதாகவும் அமமக்கள் கூறுகின்றனர். அதனால் மழைக்காலங்களில் இப்பிரதேச மக்கள் பெரும் அசௌகரிகங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் சுகாதார பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இவ்வாறாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ வேண்டிய நிலை ஏற்படடுள்ளது.

- மேலும் வீடில்லாப் பிரச்சினை, இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்பின்மை, மீனவர்களுக்கான வசதி வாய்ப்பு சரியான முறையில் செய்து கொடுகக்ப்படமை என்பவற்றால மக்கள் பெரும் பாதிப்புக்களை சந்திக்க வேண்டிள்ளது. இவை சரியான முறையில் செய்து கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு நிலவுகின்றது. இவற்றினால் சிறுபாண்மை மக்கள் வாழும் பிரதேசங்களில் அபிவிருத்தியில் மந்தநிலை என நிறைய பிரச்சினைகள் கல்முனை வாழ் சிறுபாண்மை மக்களால் எதிர்நோக்கபபடுகின்றன.

- கல்முனை நகர அபிவிருத்தி திட்டம் கல்முனை வாழ் தமிழ் மக்களின் காணிகளை சுவீகரித்து முஸ்லிம்களை குடியேற்ற இருப்பதாகவும் எதிர்காலத்தில் இப்பிரதேசம் தாழ்ந்து போகும் ஆபத்து இருப்பதாகவும் மக்கள் குற்றம்சாடடுகின்றனர். புதிய நகர அபிவிருத்தி திட்டங்கள் பலாத்காரமாகவோ ஒரு தலைப்பட்சமாகவோ நடைபெறலாம் என கருதுகின்றனர். கல்முனை தமிழ் மக்களின் இனப்பரம்பலை பாதிக்கும் வகையிலும் இவை அமையலாம்.

- 

இவ்வாறான வகையில் குறித்த மாநகர சபையிலுள்ள சிறுபாண்மை மக்களது எதிர்பார்க்கை படிப்படியாக அதிகரித்து செல்லும் வேளையில் மாநகரசபையின் நிறைவேற்றுகை குறைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத்தரவுகளின் படி சிறுபாண்மை மக்களது மாநகர சபை பற்றிய மனோநிலை மற்றும் கருத்துக்கணிப்பு பின்வரும் வகையில் அமைந்திருந்தது. கல்முனை மாநகரசபைக்குட்பட்ட மொத்த சனத்தொகையில் 28.2 வீதம் சிறுபாண்மை மக்கள் காணப்படுகின்றனர். குறித்த மாநகரசபையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் கீழ் உள்ளூராட்சி மன்றத்தின் சேவை வளங்கள் தொடர்பில் 32 மக்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகளின்படி சிறுபான்மையினர்களுக்கான மாநகர சபையின் சேவை வழங்கள் தொடர்பிலான மக்களின் நிலைப்பாடு பின்வரும் வகையில் அமைந்திருந்தது.

| **சிறுபான்மை சமூகத்திடம் வழங்கப்பட்ட வினாக் கொத்து** | **ஆம்** | **இல்லை** |
|---|---|---|
| 1. உள்ளுராட்சி மன்றங்கள் வலுவான சேவைகளை வழங்கும் அதே வேளை அதன் பொறுப்புக் கூறலும், வெளிப்படைத் தன்மையும் | 7 | 25 |
| 2. வுழங்களை பகிரந்தளிப்பதிலான பாரபட்சம் | 22 | 10 |
| 3. மக்கள் சேவைகளை பெற்றுக் கொள்வதில் பொது ஊழியர்களின் அலட்சியம் மற்றும் கால தாமதம் | 24 | 8 |
| 4. மாநகர சபையில் அரசியல் வாதிகளின் செயற்பாடு சிறுபான்மை மக்களின் வாழ்வாதாரத்தை சீர் குழைக்கின்றது. | 28 | 4 |
| 5. மாநகர சபையின் செயற்பாடுகளில் அரசியல் கட்சிகளின் தலையீடு | 27 | 5 |
| 6. சமூகம் எதிர் நோக்கும் பொதுப் பிரச்சினைகள் உரிய முறையில் தீர்க்கப்படல் | 2 | 30 |

இவ்வகையான பிரச்சினைகளுக்கு மத்தியில் மாநகர சபையின் சேவை வழங்கல் தொடர்பான அசமந்தப் போக்கு மற்றும் அச்சபையின் செயற்திறன் குன்றிய நிலை என்பது தொடர்பில் ஆய்வு செய்தபட்சத்தில் பின்வரும் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

1. மாநகர சபை பணிகள் புரியும் ஊழியர்களின் அலட்சியப் போக்கும் கவனிப்பாராற்ற தன்மையும்: உள்ளுராட்சி மன்றங்களுக்கு தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் சுயநலபோக்கும் சேவை மனப்பான்மை இன்மையும் கூட மக்கள் தமது சேவைகளை பெற்றுக் கொள்வதில் மிகப் பெரும் சவலாக நோக்கப்படுகின்றது. குறித்த மாநகர சபையானது சேவை வழங்கலினை மேற்கொள்ள ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையடைய ஊழியர்களை கொண்டிருக்கும். இவ்வாறு இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்கள் சரியான முறையில் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்கள், கடமைகள் என்பவற்றை நிறைவேற்றுவதில் பாரபட்சம் காட்டுவதாகவும் பக்கசார்போடு நடந்த கொள்வதாகவும் மக்கள் குறிப்பிடுகினன்றனர்.

2. அபிவிருத்திப் பணிகள் மற்றும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க போதியளவான ஊழியர்களை இணைத்துக்கொள்ளப்படாமை: வேலைத்திட்டங்கள், அபிவிருத்தி மற்றும் சீரமைப்பு மூலமாக கூட பணிகளை மேற்கொள்ள ஊழியர்களின் பற்றாக்குறைகள் என்பவற்றால் சிறப்பான சேவை வழங்கல் புறக்கணிக்கப்படுவதாக மக்கள் கூறுகின்றனர்.

3. நிதிவளம் காணப்பட்டாலும் அதனை உரிய முறையில் செயற்படுத்தாமை: உள்ளுராட்சி மன்றங்களுக்கான நிதி ஒதக்கீடு மத்திய, மாகாண அரசாங்கங்களின் மூலமும் மற்றும் மக்களின் வரி அறவீட்டின் மூலம் கிடைக்கப் பெற்றாலும் அந்நிதி சரியான முறையில் பிரதேசத்திற்கு பிரதேசம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதும் குற்றச்சாட்டாக நிலவி வருகின்றது.

4. கல்முனை மாநகர சபையின் செயற்பாடுகளில் அரசியல் வாதிகளின் தலையீடுகளும்.
   பொதுமக்களுக்கான சேவை வழங்கலில் தடையாக அமையும் மிகப்பிரதான காரணியாக அரசியல்வாதிகளினதும், அரசியல் கட்சிகளினதும் தலையீடுகளுமே காணப்படுகின்றன. அரசியல்வாதிகள் அரசியல் இலாபம் கருதி பெரும்பாண்மையினரின் வாக்குகளை சுவீகரிக்கும் நோக்கில் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளில் தலையிட்டு அதிகளவான சேவை வழங்கல் பெரும்பாண்மையினர் கைவசம் திணிக்க முற்படுகின்றனர். இதனால் குறித்த உள்ளூராட்சிக்குட்பட்ட சிறுபாண்மை மக்களின் நிலை பரிதாபகரமாக உள்ளது.

5. வரிகள் சரியான முறையில் அறவிடப்பட்டாலும் சேவைகள் சமமான முறையில் இடம்பெறாமை: அதாவது மக்களிடம் இருந்து வரிகள் அறவீடுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் மக்களுக்கு சேவைகள் வழங்குவதில் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை

6. மாநகர சபைக்கு மத்தி மற்றும் மாகாணசபை அரசாங்கத்தால் ஒதுக்கப்படுகின்ற வளங்கள் அமமாநகர சபைக்குட்பட்ட அனைதது மக்களுக்கும் உரித்தானவையாகும். ஆனால் அவ்வளங்கள் பெரும்பாண்மை மக்களின் கைவசம் சென்று சிறுபாண்மை மக்களில் இருந்து கைநலுவப்படுவதாக குறிப்பிடுகின்றனர்.

7. காலதாமதம்: உள்ளூராட்சி மன்றங்களின் அங்கீகாரத்தைப் பெற அல்லது அனுமதியைப் பெறுவதற்கான ஆவணங்கள் தொடர்பில் மக்களின் நாட்டம் உள்ளூராட்சி மன்றங்களை ஒட்டியதாகவே காணப்படும். இவ்வகையில் மக்கள் நாடும் போது அங்குள்ள நிர்வாகிகளால் அலைக்கழிக்கப்படுவதாகவும், குறித்த சேவைய பெற்றுக் கொள்வதில் தாமதம் நிலவுவதாகவும் முறைப்படுகின்றனார். இது கூட சிறுபாண்மையினரை மட்டந்தட்டுவதற்கான மாநகரசபையின் செயற்பாடாகும்.

8. குறைந்தளவு பிரதிநிதித்துவமும், தேர்தல் முறையும்: உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு விகிதாசார தேர்தல் முறைகளே பின்பற்றுகின்றன. இத்தேர்தல் முறையானது சிறுபாண்மையினர் தமது பிரதிநிதித்துவத்தை அதிகரித்து தாம் சார்ந்த அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள இவை பொருத்தமானதல்ல என மக்கள் குறிப்பிடுகின்றனர்.

9. திண்மக்கழிவுகளை அகற்றுவதற்காள நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சாத்தியப்பாடற்ற தன்மை:
   கல்முனை மாநகர சபைக்குட்பட் பிரதேசங்களில் திண்மக் கழிவுகளை சேகரிக்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2016 நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் நாட்டிலுள்ள அனைத்து மாநகரசபைகளும் உக்கும் கழிவுகள், உக்காத கழிவுகள் என வகைப்படுத்தப்பட்ட குப்பைகளை சேகரிப்பது என்றே குறிப்பிட்டது.

   இந்த நிலையில் மாநகரசபையில் அதனை மேற்கொள்வதற்காக வேண்டி நான்கு நிறங்களைக் கொண்ட குப்பைத் தொட்டிகள் வழங்கி வைத்திருப்பதாக ஆணையாளாரினால் குறிப்பிடப்பட்டிருந்தாலும் எந்தப் பிரதேசத்துக்கு எத்தனைக் குப்பைத் தொட்டில்கள் வழங்கப்பட்டிருப்பது என்பது இதவரை மாநகரசபையால் எந்தவித விபரங்களும் தரப்படவில்லை என்றும் அம்மக்களுக்கு எந்தவித அறிவுறுத்தல்களும் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை எனவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு மத்தியில் நாடடு மக்களின் நலன்கருதி அரசினால் கொண்டுவரப்படும் சிறப்பான சட்டதிட்டங்களை சரிவர நடைமுறைப்படுத்த உரிய அதிகாரிகள் கத்திரமான நடவடிக்கைகளை

மேற்கொள்வது அவசியமாகும். மேற்படி குறைபாடுகளை தீர்க்க பின்வரும் நடவடிக்கைகளை மாநகர சபை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் பரிந்துரை செய்கின்றனர்.

- திண்மக்கழிவு முகாமைத்துவம் ஒழுங்கமைக்கப்படுவதற்கான ஆணையாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- வருமானம் ஒழுங்கான முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.
- மக்கள் பங்களிப்புடன் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
- மக்களின் கருத்துக்கள் அவர்களது ஆலோசனைகள் என்பவற்றின் கீழ் கல்முனை மாநகர சபை திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அவசியம்.
- மாநகர சபையின் செயற்பாடுகள்,சேவை வழங்கள்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டல்.

திண்மக்கழிவு விடயத்தில் சரியான திட்டமிடலுடன் முகாமைத்துவம் செய்யப்பட்டு சேவை வழங்களுக்கான ஊழியர்களை சரியான முறையில் நியமித்து கழிகற்றல் செயல்முறையினை ஒரு குறித்த நேரசூசி அடிப்படையில் செயற்படுத்த ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.ஒதுக்கப்படுகின்ற வருமானத்தின் அடிப்படையில் அதன் செலவீனம் இன, மத, பிரதேச பாகுபாடின்றி சரியான முறையில் எந்தவித பாரபட்சமின்றி அமைவதோடு, ஒழுங்கான முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.அரசின் வெற்றி அரசாங்கத்தின் செயற்பாட்டில் தங்கியிருப்பது போன்று அரசாங்கத்தின் வெற்றியின் ஒரு பகுதி குறித்த உள்ளூராட்சி மன்றங்களிலும் தங்கியுள்ளது. உள்ளூராட்சிமன்றத்தின் வெற்றியானது குறித்த பிரதேசத்தின் வெற்றியில் தங்கியுள்ளது. அந்தவகையில் ஒரு மாநகரசபையில் உருவாக்கப்படும் அபிவிருத்தி திட்டஙகள் மக்களின் பங்களிப்போடு உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான அம்மக்களும் அத தொடாபாக ஆலோசனைகளையும், கருத்துக்களையும் முன்வைக்க முடிவதோடு அவை தொடர்பான தெளிவினையும் பெறுவர். மேலும் மக்களின் கருத்துக்கள், அவர்களின் திருப்தி மற்றும் அவர்களது இன மத கலாசாரத்திறகு பங்கம் விளைவிக்காத வகையில் மாநகரசபையின் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

மாநகர சபையின் செயற்பாடுகள், சேவை வழங்கள் தொடர்பில் மக்கள் அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அவர்களுக்கு மாநகரசபையின் செயற்திட்டங்கள், நடவடிக்கைகள் தொடர்பாக தெளிவூட்டப்பட நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் மக்களின் திருப்தி நிலையை எதிர்பார்க்க முடியும். தோழில்நுட்ப கருவிகளை கொண்டு செயற்றிட்டங்களை முன்னெடுப்பதறகான நடவடிக்கைகளை முன்னெடுத்தல். உதாரணமாக கழிவுகளை கொண்டு கூட்டுப் பசளை தயாரிக்கும் செயன்முறைகளை கொண்ட நுட்ப முறைகளை கொண்டுவருவதோடு அதனை மக்கள் மத்தியல் ஊக்குவிக்கும் நடைமுறைகளை கொண்டு வருதல்.

இந்த நாட்டில் எந்தவொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் இல்லாத சகல இன மற்றும் சகல கட்சி உறுப்பினர்களையும் ஒன்றிணைந்த ஒரு புதிய திருப்பததுடனான மனித நேய ஆட்சி மூலம் எந்தவொரு பிரதேசத்தையும், இனத்தையும் பாதிக்காத வண்ணம் சகலருக்கும் சேவை சென்றடையும் வகையில் சேவை பகிர்வு வழங்கப்பட வேண்டும். பொதுமக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிகள் ஒரே தடவையில் செலுத்தப்படுவதற்கான அழுத்தங்களை தளர்த்தி மக்களுக்கு சார்பாக அவர்களுடைய வசதிகளின் அடிப்படையில் செலுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

**8. முடிவுரை**

இவ்வாய்வானது பொதுச் சேவை வழங்கல் தொடர்பாக சிறுபாண்மை இன மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அவர்களின் கண்ணோட்டத்தின் அடிப்படையில் கல்முனை மாநகர சபை பிரதேசத்தை மையப்படுத்தி அமைந்துள்ளது. மாநகர சபைகளானது மக்களுக்கு பொது சேவை வழங்களில் சிறப்பாக செயற்பட்டு வருகின்ற போதும் அவற்றில் சிறுபாண்மை இனமக்கள் மத்தியில் நிலவும் அதிருப்தி நிலையை ஆராய்ந்து அதற்காக எவ்வாறு கல்முனை மாநகரசபை சேவைகளை வழங்க முடியும் என்பதிலும் கல்முனை மாநகரசபை தொடர்பில் மக்கள் கொண்டுள்ள எதிர் மனோநிலை அதிகரித்து

வருகின்றது. தரவுகளை பகுப்பாய்வு செய்ததையடுத்து உள்ளூராட்சிமன்றங்கள் சேவை வழங்கலை எந்தவித பாரபட்சமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடுகின்றனர். இருந்தாலும் உள்ளூராட்சி மன்றத்தின் அசமநத்ப் போக்கும், உறுதியற்ற தன்மையும் சிறுபாண்மை மக்கள் மத்தியில் ஐயத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவேதான் தற்போது மாறிவரும் உலகில் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் விரிவாக்கப்படுவதோடு அதன் வெளிப்படைத் தன்மை, பொறுப்புடமை ஆகியன சரியான முறையில் அமைவது இன்றியமையாத ஒன்றாகும்.

**நன்றியுரை**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான பீடத்தில் சிறப்புப் பட்டப் படிப்பை தொடரும் நாங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் சேவை தொடர்பிலும் அவற்றை பெறுவதில் கிறுபாண்மையோர் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் இவ்வாய்வை மேற்கொண்டோம். இவ்வாய்வானது கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சிறுபாண்மை மக்களை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களின் உதவியினாலேயே இதனை எங்களால் செய்ய முடிந்தது. கல்முனை மாநகர சபையில் சிறுபாண்மையோர் எதிர்கொண்ட பிரச்சினைகள் மற்றும் சேவை வழங்கலைப் பெற்றுக் கொள்வதில் அமமக்கள் எதிர்கொண்ட சவால்கள் என்பன தொடர்பாக தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டது. இது தவிர இவ்வாய்விற்கான பங்களிப்புக்கு தேவையான உள்ளூராட்சி மன்றங்களின் சேவை வழங்கள் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு சார்ந்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தகவல்களை வழங்கிய உள்ளூராட்சி மன்றத்திற்கும் எமது விஷேட நன்றிகள். அதேபோன்று இவ்வாய்வை சிறப்பாக மேற்கொள்ள உதவி செய்த, அதற்கான அறிவுரைகளை வழங்கிய அரசியல் விஞ்ஞான பீட விரிவுரையாளர்களுக்கும் நாம் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். இது தவிர்ந்த இதை சிறந்த முறையில் நிறைவேற்ற உதவி வழங்கிய நண்பர்கள் பெற்றோர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்து கொள்கிறோம். இவ் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் மக்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டுள்ளதோடு எந்த ஒரு அரசியல் கட்சியையோ தனிப்பட்டவர்களையோ சுட்டிக்காட்டும் வகையில் அமையவில்லை என்பதையும் தெரிவிக்கின்றோம்.

## References

1. Amarasinghe Ranjith, Gunawarthana Asoka, Wickramaratne Jayampathy & Navarathna Bandara A. M. (2010). Twenty Two Years OF Devolution, an Evaluation of the Working Of Provincial Councils In Sri Lanka, Institute For Constitutional Studies, 246
2. Abdul Jabbar, M. & Fathima Sajeetha, T. (2015, December). Citizen's Perspective on Public Service Delivery: with Special Reference to Akkaraipattu Muncipal Council Area. Paper presented at the ResearchGate. Retrived from https://www.researchgate.net/publication/309859161
3. Brendan Martin. (2004). what is public about public services? London: World Development Report. [Online] Available from: http://www.publicworld.org/docs/WhatisPublic.pdf
4. Chandler J.A (2009). *Local Government Today*, Manchester University Press. 1-2
5. Pierre Jon. (1995). *Urban AND Regional Policy*, Edward Elgar Publishing Limited, 27-28
6. Pradeep, H.U.S. (2011). Challenges of local governmentsevice delivery: Acase study of Matara Muncipal Council. (Master thesis, North South Unniversity). Retrived from http://mppgnsu.org/attachments/339_Pradeep%20Thesis.pdf
7. http://maatram.org/?p=3773
8. http://www.etu.org.za/toolbox//localgov/munservice.html
9. http://www.nasplanka.com/2017/03/blog-post_73.html?m=1
10. http://www.viduthalainews.com/2016/11/blog-post_733.html